★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 35 ஆனி 20 தம். 22 இதழ் 143

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 4—7—83

பரு. பெண்கள் கல்லூரியில்

## துப்பாக்கிமுனையில் அசிட், தட்டச்சு இயந்திரம் கொள்ளை

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடத்தில் துப்பாக்கி முனையில் அசிட்டும், கல்லூரியிலுள்ள தமிழ் தட்டச்சு யந்திரமும், மூன்று முகமூடி இளைஞர்களால் கொள்ளையடிக்கப் பட்டது.

நேற்று முன்தினமிரவு 7-30 மணியளவில் 3 இளைஞர்கள் அங்குள்ள தாங்கள் முப்படையைச் சேர்ந்தவர்கள்' எனத் தங்களை அறிமுகம் செய்துவிட்டுக் காவலாளியுடன் அங்குள்ள அதிபரின் விடுதிக்குச் சென்றதாக கூறப் படுகிறது

ஒருவர் அரைக்காற்சட்டையும், இருவர் நீளக்காற்சட்டையும் அணிந்திருந்ததாகவும், இருவர் கைத்துப்பாக்கியும், ஒருவர் கத்தியும் வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

காவலாளியைப் பயமுறுத்தி அவருடன் அதிபரின் விடுதிக்கு சென்று அவரிடம் விஞ்ஞான கூடத்திறப்பை இளைஞர்கள் கேட்டதாகவும், அதிபர் விஞ்ஞானகூடத் திறப்பு தன்னிடமில்லையெனக் கூறிய போது கந்தோர் திறப்பை அவர்கள் கேட்டதாகவும், அப்போது அதிபர் கந்தோர் திறப்பைக் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது. துப்பாக்கி முனையில் ஒருவர் அதிபரைப்

(8-ம் பக்கம் பார்க்க)

# வட பகுதி கிராமப்புற பஸ்சேவைகள்

# இன்றுமுதல் ரத்து

## எரிபொருள் தட்டுப்பாடு காரணம்

(ஏ. வி. மாணிக்கம்)

**வடபிராந்தியத்தில் இன்றுமுதல் கிராமங்களுக்கூடாகச் செல்லும் பஸ் சேவைகள் யாவும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. பிரதான பாதைக ளில் மட்டுமே தொடர்ந்து பஸ்சேவை நடைபெறும்.**

வடபகுதிபுகையிரத சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கேணிடாவில் யாழ். தேவி தீக்கிரையானதைத் தொடர்ந்து கொழும்பு ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டன.

இதனால் வடபகுதியில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இத்தட்டுப்பாட்டைச்சமாளிக்கும் பொருட்டே கிராமப்புற பஸ்சேவைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்து சபையைச்சேர்ந்த உயரதிகாரியொருவர் தெரிவித்தார். யாழ்-கொழும்பு ரயில் போக்குவரத்துச்சேவை மீண்டும் ஆரம்பமானதும் இந்த பஸ்சேவைகள் தொடர்ந்து நடைபெறுமென்றும் அவர் தெரிவித்தார்.

## வட்டுக்கோட்டையில் பஸ் தீக்கிரை!

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று நேற்றிரவு 8-00 மணியளவில் வட்டுக்கோட்டைச் சந்தியில் தீக்கிரையானது.

கோண்டாவில்டிப்போவைச் சேர்ந்த 23ஸ்ரீ9160 இலக்கமுடைய பஸ்ஸுக்கே தீவைக்கப் பட்டது.

இனந்தெரியாத முகமூடி அணிந்த மூன்று நபர்கள் பஸ்ஸுக்குள் சென்று துப்பாக்கி முனையில்பஸ்சாரதி, நடத்துநர் மற்றும் பிரயாணிகளை வெளியேற்றிவிட்டு பஸ்ஸுக்கு தீ வைத்ததாகத் தெரியவருகிறது

இந்த பஸ் முற்றாக எரிந்து விட்டது. (மா)

## திருநெல்வேலியில் சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

"அரச அடுகளி ரயிலை தீக்கிரையாக்கியது நாமே" என்று எழுதப்பட்டு கீழே தமிழீழ விடுதலை இராணுவம் என்று பொறிக்கப்பட்டுள்ள சுவரொட்டி ஒன்று திருநெல்வேலிச்சந்தியில் நேற்றுக் காணப்பட்டது. (மா)

## நெல்லியடியில் பஸ்ஸுக்கு தீ!

(புலோலி)

நெல்லியடியில் நேற்றுமுன்தினமிரவு பஸ் ஒன்றுக்குத்தீ வைக்கப்பட்டது

கல்லுவத்திலிருந்து பருத்தித்துறைக்கு நேற்று முன்தினமிரவு 8-30 மணியளவில் சென்ற பஸ்ஸுக்கே தீவைக்கப்பட்டது.

பஸ் நெல்லியடிக்கு வந்த போது சாரதியையும், கண்டக்டரையும் தவிர வேறு பிரயாணிகள் எவரும் இருக்கவில்லை என்றும் அங்கு இரு இளைஞர்கள் ஏறியதும் பஸ் புறப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வழியில் இளைஞர்கள் கத்தியைக்காட்டி பஸ்ஸை நிறுத்துமாறு சாரதிக்கு எச்சரித்ததாகவும் இதைத் தொடர்ந்து வேறுபல இளைஞர்களும் அங்கு கூடியதும் பஸ்ஸுக்கு தீவைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

★ திருகோணமலை சம்பவத்தின் எதிரொலி

## யாழ். பல்கலைக்கழக மாணவர் இன்றுமுதல் பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பர்!

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைசம்பவங்களை தொடர்ந்து மாணவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதால் இன்று முதல் நடைபெறும் யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பதென்று யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மாணவர் அவை நேற்று முடிவு செய்துள்ளது.

### மாணவர் அவை தீர்மானம்

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்தக்காலகட்டத்தில் நடைபெற இருந்த சகல பரீட்சைகளுக்கும் மாணவர்கள் சமுகமளிக்க மாட்டார்கள் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர்அவை அறிவித்துள்ளது.

திருமலையில் நடைபெற்ற அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்ட திருமலை மாணவர்களின் மனநிலையும் ஏனைய மாணவர்களின் மனநிலையும் பாதிப்படைந்துள்ளதால்அவர்கள் பரீட்சைக்கு இந்த காலகட்டத்தில் ஆயத்தங்கள் செய்ய முடியாத நிலையில் இருப்பதாக மாணவர் அவையிடம் மாணவர்கள் செய்த முறைப்பாட்டைத்தொடர்ந்து இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்

(8ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரிலிருந்து

சர்வதேச நேரடி ரெலெக்ஸ் சேவை

இன்று ஆரம்பம்!

உலகின் எந்த நாட்டுடனும் நேரடி ரெலெக்ஸ் சேவையை முதன் முதலில் யாழ். நகரில்

யூனிவேர்சல் ரெலெக்ஸ்

நிறுவனத்தினர் இன்று பெருமையுடன் அறிமுகஞ்செய்கின்றனர்.

குறிப்பு: இன்று 4-7-83 திங்கட்கிழமை காலை 9-15 — 10-15 மணிக்கு யாழ். எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் இச்சேவையை ஆரம்பித்து வைப்பார். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

'UNIVERSAL TELEX'

300, HOSPITAL ROAD — JAFFNA

TEL: 23100
23006

TELEX: 22136 UNITEL CE

(7841)

## கந்தர்மடத்தில் சிசுவின் சடலம்

(யாழ்ப்பாணம்)

ஒரு நாள் சிசுவின் சடலம் கந்தர்மடத்துக்கு அண்மையில் காணப்பட்டதைத் தொடர்ந்து யாழ். பொலிசுக்குப் புகார் செய்யப்பட்டது

பொலிசார் இச்சிசுவின் சடலத்தை யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## லொறிக்கு குண்டுவீச்சு! வவனியாவில் சம்பவம்

(வவனியா)

வவனியா குருமன்காடு பார் குளப்பகுதியில் நேற்று முன்தினம் லொறி ஒன்று குண்டுவீச்சுக்கு இலக்கானது

இந்தலொறி கடந்த சனிக்கிழமை இரவு 12மணியளவில் லொறிச்சொந்தக்காரரின் வீட்டின் முன்னால் நின்றபோது குண்டுவெடிச்சத்தம்கேட்டு லொறியின் பின்பக்கத்தில் படுத்திருந்த லொறி உரிமையாளரின் சகோதரர் விழித்துக் கொண்ட போது லொறியின் பின்புறம் ஒரு குண்டு எறியப் பட்டதாகக் கூறப்பட்டது.

இவர்கள் வவனியாவில் விமானப்படையினர் தங்கியிருக்கும் பக்கமாக ஓடினார்கள் என்று பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்குண்டு வெடிப்பால் 20.000ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (ப-ரு)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சகல வேலைகளும் செய்யக் கூடிய மரவேலை இயந்திரம் விற்பனைக்குண்டு. விபரம் கிறீ கிருஷ்ண விலாஸ், (ஸ்ரேசன் முன்பாக), கண்டி றோட், கொடிகாமம். (7781)

சாவகச்சேரிச் சந்தையிலிருந்து 300 யார் தூரத்திற்குள் வீடு கட்டக்கூடிய 2 பரப்பு 7 குழிக்காணி விற்பனைக்குண்டு. கூடிய விலை கோருபவருக்கு வழங்கப்படும். விபரங்களுக்கு: திரு. வை. விஜயபாஸ்கரன், இல. 24, கண்டுவில் (கிழக்கு) ஒழுங்கை, சாவகச்சேரி அல்லது நகரசபை அலுவலகம், சாவகச்சேரி. தொலைபேசி: 276. (7790)

## தேவை

ஜவுளி விற்பனையில் திறமை மிக்க விற்பனையாளர்கள் இன்னும் இருவர் தேவை. அத்துடன் திறமையான சமையற்காரர் ஒருவரும் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். 'ராஜலக்ஷ்மி ஸன்ஸ்', 122, பிரதான வீதி, பருத்தித்துறை. 7802

பிரபல சைவ ஹோட்டலுக்கு பில் கிளார்க் மற்றும் ஹோட்டல் அனுபவம் உள்ள ஊழியர்கள் தேவை. தொடர்பு: ஸ்ரீகிருஸ்ணபவான், 171, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 7828

யாழ். நகரில் பிரபல்யமுள்ள வர்த்தக நிறுவனமொன்றுக்கு 10 வருட அனுபவமுள்ள பைப் வேலை செய்பவர்கள், மின்னியல் வேலை செய்பவர்கள், மோட்டர் வைண்டிங் வேலை செய்பவர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 7809, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7809

## கல்வி

மோட்டர் மெக்கானிசம் கிழமை நாட்கள் காலை வகுப்புக்கள் உடன் தொடர்பு கொள்க. பொறியியல் கல்வி நிலையம் (Engineering Education Centre) சாந்தி தியேட்டர் அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், (யாழ்ப்பாண கல்விநிலைய கட்டிடம்) யாழ்ப்பாணம். விரிவுரையாளர் S. C. இம்மானுவேல், B. sc. Cey. Electrical and Automobile Engineer. 7780

சகல தரத்தினருக்கும் ஏற்ற முறையில் ஆங்கில / பிரெஞ்சு பாஷைகளில் தனிப்பட்ட முறையில் வகுப்புக்கள் நடத்தப்படும். விபரங்களுக்கு: க. வி. சிவசுப்பிரமணியம், 469, நாவலர்வீதி, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். 7816

## WANTED

Wanted Canvassers for Consumer Products Advt, No: 7838 C/o Eelanadu P. O Box 49 Jaffna 7838

## விற்பனைக்கு

கண்டி வீதி - புங்கன்குளச் சந்தியில் வீடும் 1½ பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: மரின் சேவிசஸ் அ டன்லப் ஸ்ரோர்ஸ் 234 (446), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23541 7830

ஒஸ்ரின் JU /250 டீசல் வான் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். நோர்தேண் இன்டஸ்றீஸ் கொக்குவில். 7782

## தேவை

இரும்பு வீட்டுத் தளபாடங்கள் செய்வதில் 3 வருட அனுபவமுள்ளோர் உடன் தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். பரஸ்கோ, நல்லூர், யாழ்ப்பாணம். 7833

யாழ். நகர எல்லைக்குள் அல்லது சமீபமாக பகுதி அல்லது சிறிய வீடு வாடகைக்குத் தேவை. வைத்தீஸ்வரன் பாலேந்திரா, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. 7839

பிடவை ஸ்தாபனத்திற்கு ஆண் விற்பனையாளர் தேவை. தொடர்பு கொள்ளவும். ஜெயந்தாஸ் 54 பெரியகடை, யாழ்ப்பாணம். 7837

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த வல்லிபுரம் சுப்பிரமணியத்தின் மரண சாதன விடயமாக

எதிர்

வரணி கரம்பைக் குறிச்சி வல்லிபுரம் சுப்பிரமணியம் பெண் கருணேஸ்வரி.

மரணசாதன நியாயாதிக்கம் —இல 211ரீ.

மேலே இலக்கம் பூண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரண மெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1983 ஆண்டு ஆனி மாதம் 1ந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுனகட்டளை பதியப் பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக்கட்டளைப்படி
பதிவாளர்
வி. சிவசுப்பிரமணியம்

வரைவு
வி. பி. கார்த்திகேசு
மனுதாரரின் சட்டத்தரணி.
7836

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## குடாக்கனை கொலைவழக்கு

(மாவிட்டபுரம்)

சுழிபுரம் குடாக்கனை கொலைச்சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்ட கத்தி ரசாயன பகுப்பாய்வுக்காகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சுழிபுரம் குடாக்கனையைச் சேர்ந்த கணபதி சின்னன் [43 வயது] என்பவர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக வைரவன் கந்தசாமி என்பவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து இரத்தக்கறை படிந்த கத்தியும் மீட்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே நிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார் அத்துடன் அவரிடமிருந்து மீட்கப்பட்ட கத்தியும் காங்கேசன்துறைப் பொலிசாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

நீதிபதி திரு சீ. வி. விக்னேஸ்வரன் மேற்படி நபரை இம்மாதம் 11ம் திகதி வரை நிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டு மேற்படி கத்தியை ரசாயன பகுப்பாய்வுக்காக கொழும்புக்குக்கு அனுப்புமாறும் உத்தரவிட்டார்.

சந்தேக நபர் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். (வ)

இ. சிவசுப்பிரமணியம்
சட்டத்தரணி & நொத்தாரிசு
திருநெல்வேலி தெற்கு
யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கு செல்வநாயகம் கைம்பெண் மகாலட்சுமியின் மரணசாதன விடயமாக

1. திருமதி கமலாஜனி புவனேந்திரன்
2. கலாநிதி கதிர்வேலு புவனேந்திரன், திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம், தற்போது சிங்கப்பூர், தமது அற்றோணித் தத்துவகாரர் திருநெல்வேலி வடக்குகைலாசம் இரத்தினசிங்கம் மூலம்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3733

மனுதாரர்

எதிர்

1. திருமதி லதாஜனி சிவகுமார்
2. ராஜா இளகுமார் கட்டுடை மானிப்பாய்

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாசனத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆட்கள் எவரும் 1983ம் ஆண்டு ஆடிமாதம் 15ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1983ம் ஆண்டு வைகாசி மாதம் 30ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
த. குலஞானம்
பதிவாளர்.
7651

எங்கள் காணி வீடு வியாபாரத்தில் சேர்ந்து
வருடமொன்றுக்கு உங்கள் பணத்துக்கு
26% தொடக்கம் 30% வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
**குறைந்த தொகை ரூபாய் 1000/-**
எந்நேரமும் அறிவித்தலின் பின்
முழுப் பணத்தையும் திருப்பிப்பெறலாம்.
விபரங்களுக்கு:-
**Jaffna Property Trades Ltd.,**
3, நவீன சந்தை, (மேல் மாடி)
யாழ்ப்பாணம். போன்: 23698

**சட்ட அறிஞர்களுக்கு ஓர் நற்செய்தி!**

**One Hole Puncher**

தற்பொழுது இறக்குமதி செய்யப்பட்டு
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.
ஒன்றினது விலை ரூ. 48/50 சதம்
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு
**அம்பலவாணர் அன் சன்ஸ்**
196, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்:- 24291

## புலமைப் பரிசிற் பரீட்சை 5

1983 செப்டம்பர் 1 ஆம் தேதி ஆரம்பமாகும்.

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர் உதவிப் பணம் வழங்குவதற்குமான 5 ஆம் தரப் பரீட்சைக்குரிய புதிய பயிற்சி நூல்கள் விற்பனையாகின்றன.

இந்நூல்கள் பழைய வினுத்தாள்களைப் போல் அல்லாது 82 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய பாடத் திட்டத்தையும் புதிய வினுத்தாள்களையும் கொண்டு ஆக்கப்பட்டன. இறாமைச் சித்திக்கு உத்தரவாதம் அளிப்பன.

1. புதிய கணிதப் பயிற்சி 15-00
2. புதிய தமிழ் மொழிப் பயிற்சி 12-00

வெளியீடு:-
கு. வி. அச்சகம்
386, மணிக்கூட்டு வீதி, — யாழ்ப்பாணம்.
விற்பனையாளர்:-
ஞானசூரபி புத்தகக் கம்பனி
217, மின்சாரநிலைய வீதி, — யாழ்ப்பாணம்.
7832

அறிமுக
**மலிவு விற்பனை**
புதிய **AGFA** கசற்
விலை 30/-
**நியூ விக்ரேஸ்**
எலெக்ரோனிக்
கொம்பிளெக்ஸ்
யாழ்ப்பாணம்.

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற கைதேர்ந்த 'வீடியோ' கமரா வல்லுநர்களால் உங்கள் மங்கள வைபவங்களை.
**வீடியோவில் படம் பிடித்துக்கொள்ள** முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்
**வீனஸ்** 266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.
**நியூவீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

# இந்தியாவில் அணு சகாப்தம் உதயம்!

## கல்பாக்கம் அணுமின்நிலையம் செயற்படத் தொடங்குகிறது!

சென்னை, ஜூலை. 3

இந்தியாவின் விஞ்ஞானிகளினால், உள்நாட்டு மூலப் பொருள், தொழில் நுட்பம் என்பவற்றினைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட முதலாவது அணுமின் நிலையம் செயற்படத் தொடங்கியுள்ளது.

சென்னைக்கருகில் கல்பாக்கம் என்னுமிடத்தில் அமைக்கப்பட்ட இந்நிலையம் செயற்படத் தொடங்குவதுடன் இந்திய அணுசக்தி சகாப்தத்தினுள் பிரவேசிப்பதுடன் உலக அரங்கில் அணுசக்தியைப் பயன்படுத்தும் முக்கிய நாடுகளில் ஒன்றாகவும் மாறுகிறது.

அமெரிக்கா, சோவியத்யூனியன், பிரிட்டன், பிரான்ஸ், மேற்குஜேர்மனி, சுவீடன், ஜப்பான் என்பனவே இது வரை அணுசக்தியை நவீன தேவைகளுக்கு பயன்படுத்திய நாடுகளாகும். இந்த வரிசையில் இப்போது இந்தியாவும் சேர்ந்துகொண்டது.

கல்பாக்கம் அணு மின் நிலையம் செயற்படத் தொடங்குவதினால் எதிர்வருங்காலங்களில் அணுசக்தியை பயன்படுத்தி கூடுதலான அளவு மின்சக்தியை பெறக்கூடியதாய் உள்ளது. இதன்மூலம் கைத்தொழில் துறை, விவசாயத்துறை என்பனவற்றில் புதிய தொழில் நுட்பங்கள் ஏற்படுத்த வழி பிறக்கும். இதன் மூலம் பெருமளவாக இருந்துவரும் மின்சாரத் தட்டுப்பாடும் நீங்க இடமுண்டு.

கல்பாக்கம் அணு மின் நிலையம் இந்திய அணுசக்தி நிலையத்தினரால், இந்திய மின் நிலையத்தின் துணைகொண்டு அமைக்கப்பட்டது. இதனை அமைப்பதில் இந்தியாவின்பல உயர்தர விஞ்ஞானிகள் பங்கு கொண்டிருந்தனர். (சூ)

## வீமன்காமம் கொலைவழக்கு ஆகஸ்ட் 8க்கு ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

வீமன்காமம் குடியேற்றத் திட்டக் கொலை வழக்கு விசாரணையின்போது ஏற்பட்ட சட்டப் பிரச்சினை ஒன்றையடுத்து அதுபற்றி விவாதித்து முடிவெடுப்பதற்காக விசாரணை அடுத்த மாதம் 8ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வீமன்காமம் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த நல்லான் அல்விக்குட்டி என்பவரை இருப்புச்சல கையால் தாக்கி கொலை செய்ததாக வீமன்காமத்தைச் சேர்ந்த சந்தையா சின்னராஜா அல்லது குட்டியன் என்பவர்மீது குற்றஞ் சாட்டிக் காங்கேசன்துறை பொலிசாரால் தொடரப்பட்ட இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அச்சமயம் சம்பவத்தை விசாரித்த காங்கேசன்துறை பொலிஸ் முன்னாள் சப் இன்ஸ்பெக்டர் திரு. பீரிஸ் சாட்சியமளிக்கையில், சம்பவத்தின் போது எதிரியால் விட்டுச் செல்லப்பட்ட டோர்ச் லைட் ஒன்றைத் தாம் கைப்பற்றி கைவடையாள நிபுணருக்கு அனுப்பியிருப்பதாகவும், அதில் கைவடையாளம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

வழக்கை நடத்திய காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சீ ஜயசந்திரா இக்கட்டத்தில் எதிரியின் கைவடையாளத்தைத் தாம் பெற்று கைவடையாள நிபுணருக்கு அனுப்பி டோர்ச் லைட்டில் உள்ள கைவடையாளமும், இவரது கைவடையாளமும் ஒத்திருக்கின்றனவா என ஆராயவேண்டியுள்ளதால் கைவடையாளத்தை எதிரியிடம் பெற அனுமதிக்குமாறு நீதிபதியிடம் கோரினார்.

ஆனால் எதிர்தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இதனை ஆட்சேபித்தார்.

"ஒரு வழக்கில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை ஆரம்பித்தபின்னர் எதிரியின் கைவடையாளத்தைப் பொலிசார் பெற சட்டத்தில் இடமில்லை. குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுமுன் தமது விசாரணையின் போதே பொலிசார் எதிரியின் கைவடையாளத்தைப் பெறலாம். ஆகவே இப்போது எதிரியின் கைவடையாளத்தைப்பெற பொலிசாருக்கு அனுமதியளிக்கக் கூடாது" என்று சட்டத்தரணி வாதிட்டார்.

[7-ம் பக்கம் பார்க்க]

## தமிழ்நாட்டில் யானைகள் குறைகின்றன

சென்னை, ஜூலை. 3

தமிழ்நாட்டில் யானைகள் குறைவடைந்து வருவதாக வனத்துறை ஆய்வொன்று தெரிவிக்கின்றது. கடந்த ஐந்தாண்டுக்கு பின்னர் இப்போது 27 சதவீதத்தினால் யானைகள் குறைந்துவிட்டன.

தமிழ்நாட்டில் ஏற்பட்டு வரும் தண்ணீர் மற்றும் இரை பிரச்னைகளினால் யானைகள் கர்நாடகமாநிலத்துக்குசென்று விடுவதே இதற்குக் காரணம் என்று அந்த அறிக்கை கூறுகிறது. (சூ)

## மொசாம்பிக்கில் கடும் வறட்சி, அரைப்பங்கு மக்கள் பட்டினி

லண்டன், ஜூலை. 3

மொசாம்பிக் நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் அங்கு வாழும் மக்களில் அரைப் பங்கினர் உணவின்றிப் பட்டினியால் வாடுகின்றனர்.

ஆபிரிக்கநாடான மொசாம்பிக்கில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக அங்கு உணவு உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன் கால்நடை உற்பத்தி, ஏனைய உற்பத்திகளும் படுமோசமாக வீழ்ச்சியடைந்தமையைத் தொடர்ந்துபட்டினியால் வாடும் மக்களுக்குஎன்ன செய்வதென்று தெரியாது அந்த நாட்டு அரசாங்கம் திண்டாடுகிறது.

இது தொடர்பாக வெளி நாட்டுப் பிரதிநிதிகளுடன் மொசாம்பிக் அதிகாரிகள் தொடர்பு கொண்டு கூடுதலான உணவுப் பொருள்களை அனுப்பிவைக்கும்படி வேண்டியுள்ளனர். (சூ)

## கள்ளச்சாராயம் அருந்திய 8 பேர் மரணம்

புதுடெல்லி, ஜூலை 3

பீஹாரில் கள்ளச்சாராயம் அருந்தியதினால் 8 பேர் உயிரிழந்தனர். இதுதொடர்பாக சோதனையிலீடுபட்ட பொலிஸார் சாராயம் வடித்ததாகக் கூறப்படும் இரண்டுபேரைக் கைதுசெய்தனர். (சூ)

## நமீபியாவில் வனவிலங்கு வேட்டை!

லண்டன் ஜூலை 3

நமீபியாவில் ஏற்பட்டு வரும் வறட்சி காரணமாக அங்கு உற்பத்தி நிலங்களாவும் பாலைவனமாக மாறுகின்றன.

காடுகளில் நீர் நிலைகள் வற்றி வருவதினால் வனவிலங்குகள் நீர்தேடிப் பலமைல் தூரம் செல்கின்றன. நீர் கிடைக்காமல் சில இறந்தும் விடுகின்றன.

வன விலங்குகளுக்கு ஏற்பட்டுள்ள இந்நிலைமை நீக்க நாட்டின் ஒருபகுதி வனவிலங்குகளை அழிப்பதே தகுந்த வழி என உணர்ந்து அந்த நாட்டு வனப்பாதுகாப்பு சபை வனவிலங்குகளை அழிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இதன்முதற்கட்டமாக அங்கு யானைகள் அழிக்கப்படுகின்றன. இந்நடவடிக்கை இரக்கமற்ற செயலாயிருந்தபோதிலும் ஓரளவு வனவிலங்குகளைப் பாதுகாக்க இதனைவிட வேறு வழியில்லையென்று நமீபியா நாட்டு வனவிலங்குப் பாதுகாப்பு சபையினர் தெரிவித்துள்ளனர். (சூ)

## பாலஸ்தீன -சிரியா பேச்சுவார்த்தைகள்

டமஸ்கஸ், ஜூலை. 3

பாலஸ்தீன இயக்கத்துக்கும், சிரியாவுக்கும் இடையில் நிலவும் கருத்துவேற்றுமைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக பலஸ்தீன தூதுக்குழுவொன்று டமஸ்கஸ் செல்லவுள்ளது.

இத்தூதுக்குழு சிரிய அதிபருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இருதரப்பினரிடையேயும் சுமுகமான உறவுகளை ஏற்படுத்த முயற்சிமேற்கொள்ளும். (சூ)

## பஞ்சாப்மாநிலத்தில் மீண்டும் வன்முறைகள்: இருவர் பலி!

புதுடில்லி, ஜூலை. 3

பஞ்சாப் மாநிலத்தில் மீண்டும் வன்முறைச் சம்பவங்கள் தொடங்கியுள்ளன. அங்கு பொலிசார்- தீவிரவாதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் பொலிசார் சுட்டதில் இரு தீவிரவாத சீக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் "பாலா பக்குவா" என்ற மாவட்டத்தில் தீவிரவாத குழுவொன்று பொலிசாரைத் தாக்கிச்சுட்டனர். பொலிசார் திருப்பிச் சுட்டதில் ஒருவர் பலியானதாக அறியப்படுகிறது.

இன்னொரு பகுதியில் கட்டுக்கடங்காச் சீக்கியர் கூட்டமொன்று பொலிஸ் காவல்நிலையத்தைத் தாக்கியது. இக்கும்பலைக்கலைக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஒருவர் அவ்விடத்திலேயேமாண்டார். ஏனையோர் ஒரு மறைவான கட்டடத்தினுள் ஒளிந்துகொண்டனர். பொலிசார் அக்கட்டடத்தினுள் புகுந்து அங்கிருந்த 30 பேரைக் கைதுசெய்ததுடன் ஏராளமான ஆயுதங்கள், வெடிமருந்துகள் என்பனவற்றையும் கைப்பற்றினர்.

இப்பகுதிகளில் தீவிர கண்காணிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சூ)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

### புதிய இரசாயனக் கட்டிடத்திற்கு மரத் தளபாடம் வழங்குதல்

புதிய இரசாயனக் கட்டிடத்திற்கு மரத் தளபாடங்களை வழங்குவதற்கும் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. அளவுகள் பற்றிய பட்டியல், மரத் தளபாடங்களின் விபரங்கள் அடங்கிய வரைப்படங்கள், ஏனைய விபரங்கள் ஆகியனவற்றை இப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 08-07-1983-ம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளமுடியும். இப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 25-00 ரூபாவுக்கு காசுக் கட்டளை/தபாற் கட்டளை அனுப்பப்படல் வேண்டும். கேள்விகளுக்கான முடிவு திகதி 18-07-1983 முற்பகல் 10-00 மணி ஆகும்.

பதிவாளர்

7810


ரி. வி. கேம்ஸ்

பெரியவர்கள், இளைஞர்கள், பெண்கள், சிறுவர்கள் அனைவருக்கும் பொழுது போக்கிற்கு இருபது விதமான ரி. வி. விளையாட்டுக்கள் 25 சதம், 50 சதம், ஒரு ரூபா

முற்றும் குளிரூட்டப்பட்ட நியூவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸில் உங்கள் முப்பரிமாண சக்தியைப் பெருக்கிக்கொள்ள ரி. வி. விளையாட்டுக்கள்.

நியுவிக்ரேஸ் எலெக்ரேனிக் கொம்பிளெக்ஸ்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



கோண்டாவில் ரயில் நிலையத்தில் தீவைத்து எரிக்கப்பட்ட 'யாழ் தேவி'யின் ஒருபக்கத்தையும், எரியுண்ட ரயிலின் குளிரூட்டப்பட்ட பெட்டியின் பின்பகுதியையும் படத்தில் காண்கிறீர்கள். (படம்: 'தேவா')

## 'மலத்தியோன்' கலக்கப்பட்ட
# உழுந்து, பயறு எரிக்கப்பட்டது; வியாபாரிக்கு எச்சரிக்கை!

(சாவகச்சேரி)

மலத்தியோன் பவுடர் கலக்கப்பட்ட சுமார் 10 கிலோ நிறையுள்ள உழுந்தையும் பயிற்றையும் சாவகச்சேரிசந்தையில் விற்பனை செய்யப்படுவதாக பாவனையாளர்கள் சுகாதார பரிசோதகருக்குப் புகார் செய்தனர்.

உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த சுகாதார பரிசோதகர் மலத்தியோன் பவுடர் கலக்கப்பட்ட உழுந்தையும் பயிற்றையும் பொதுமக்கள் முன்னிலையிலேயே சந்தை வெளியில் எரித்து நாசமாக்கினார்.

இப்பொருட்களை விற்பனைக்காகக் கொண்டு வந்த வியாபாரியையும் சுகாதார பரிசோதகர் எச்சரிக்கை செய்தார். (ச)

## முருங்கைக்காய் வாங்க
# பக்கத்து வீடு சென்று
## திரும்புமுன் நடந்தது கொள்ளை!

[மாவிட்டபுரம்]

பட்டப்பகலில் வீட்டுக்கு சமீபமாக அடுத்த வீட்டுக்குச் சென்று திரும்புமுன் வீட்டிலிருந்த நகைகள் சேலைகள் என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று காங்கேசன்துறை காட்டடைப்பு வீதியில் இடம் பெற்றுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் காட்டடைப்பு வீதியைச் சேர்ந்த செல்லையா மகேஸ்வரி என்பவர் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

காலை 8-45 மணியளவில் தாம் பக்கத்து வீட்டில் முருங்கைக்காய் வாங்கச்சென்று 9-15 அளவில் வீடு திரும்பியபோது வீட்டுக்கதவு திறந்திருந்ததாகவும், அலுமாரியிலிருந்த சங்கிலி, காப்பு, மோதிரம், பெட்டியிலிருந்த சேலைகள் என்பன திருட்டுப்போயிருந்ததாகவும் மொத்தமாக 9,786 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸில் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறைப் பொலிசார் இச்சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். [அ]

# தந்தையின் இறுதிச் சடங்கில்
## காவலுடன் கலந்து கொண்டார்!

(வவுனியா)

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்த தமிழ் இளைஞர் தந்தையின் மரணச் சடங்கில் ராணுவக் காவலுடன் கலந்து கொள்ள வவுனியா கொண்டு வரப்பட்டார்.

நொச்சி மோட்டையைச் சேர்ந்த சிவராஜசிங்கம் என்ற இளைஞன் வெலிக்கடை சிறைச்சாலையில் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞனின் தந்தை காலமாகிவிட்டதினால், தந்தையின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வவுனியாவுக்கு சிறைச்சாலை வாகனத்தில் கைவிலங்குகளுடன் மரண சடங்கு வீட்டில் மிககுறைந்த நேரம் மட்டுமே இவர் பங்கு பற்ற அனுமதிக்கப்பட்டார்.

# விவேகானந்தர்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வருடிக்களாகிக் குபேர வாழ்வு வாழ்கிறார்கள். நடுத்தரவகுப்பில் உள்ளவன் மேல்மட்டத்தில் உள்ளவனைப் பார்த்து உள்ளம் புழுங்குகிறான் சூதும் வாதும் கள்ளமும் கோளும் குள்ளநரித் தந்திரமும் கையாண்டு தன்னைப் பாதுகாக்க முயலுகின்றான். சுயநலமே அவன் உருவம். மிஞ்சினால் கெஞ்சுகிறான். கெஞ்சினால் மிஞ்சுகிறான் வலியோரைத் தான் பணிகிறான், எளியவரை எட்டி உதைக்கிறான் தெய்வ நம்பிக்கையும் இல்லை. தன்மானமும் இல்லை. மூட நம்பிக்கையிலே மூழ்கிக்கிடக்கிறான்.

சுவாமி விவேகானந்தர் அன்று சொன்னவற்றை இன்றுள்ள நம் தமிழினத்துக்காகத்தான் சொன்னாரோ என்றல்லவா எண்ணத்தோன்றுகிறது. தமிழினம் கடைத்தேற அவர் காட்டும் வழியென்ன? "கிழக்கும் மேற்கும்" என்ற அவருடைய உபந்நியாசங்களில் பொருத்தமான சில பகுதிகளை இங்கே பார்ப்போம்.

"ஒவ்வொரு நாட்டுக்கும் அதற்கெனத் தனித்துவமான பண்பாடும் ஒன்றுண்டு. உதாரணமாகப் பிரெஞ்சு மக்களை எடுத்துக்கொள்வோம். அவர்களுடைய உயிர்நாடி அரசியல் சுதந்திரப் பற்று. எந்தப் பளுவையும் அவர்கள் சுமக்கத் தயார்; வரிகளை உயர்த்தலாம்; எல்லோரும் ராணுவத்தில் சேரவேண்டும் என்று நிர்ப்பந்திக்கலாம்; எதையும் அவர்கள்மேல் திணிக்கலாம்; அவர்கள் பொறுத்துக்கொள்வார்கள். ஆனால், அரசியல் சுதந்திரத்தில் இம்மியளவேனும் தலையீடு இருக்குமேயானால் பிரெஞ்சுமக்கள் அனைவரும் தனியொருமனிதனாகச் சேர்ந்துபோர்தொடுப்பார்கள். அடுத்து ஆங்கிலேயரைஎடுத்துக்கொள்ளுவோம். எங்கும் எதிலும் சமத்துவம். உரிமைகளைச் சமத்துவமாக அனுபவிப்பதே அவர்களின் தனிப்பண்பு, கொடுப்பதும் வாங்குவதும் அவர்களுக்கு வர்த்தக ரீதியான அமைப்பு. இது அவர்களுடைய அடிப்படைக்குணம். ராஜ விசுவாசம் பூண்டவர்கள். தெய்வத்திற்கு அடுத்ததாக மன்னனை மதிப்பவர்கள் ஆங்கிலேயர். ஆனால் பணப்பையில் கைவைத்தால் ஏன்? எதற்கு? காட்டு கணக்கை!' என்பார்கள். ஆங்கில நாட்டு மன்னன் ஒருவன் பலாத்காரமுறையில் வரியறவிட முனைந்தான்; எழுந்தது புரட்சி; தொலைந்தான் மன்னன்.

இனி இந்துக்களை எடுத்துக் கொள்வோம். அரசியலும் சமூக சுதந்திரமும் முக்கியமானவை தான். ஆனால், ஆன்மீக சுதந்திரம் - முக்தியே - முதன்மையானது இந்துவுக்கு! அதுவே எல்லாவற்றிலும் மேன்மையானது என்பதுதான் இந்துவின் தனிப்பண்பு! எவ்வளவு வேண்டுமானாலும் பொறுத்துக்கொள்வான் அடியுங்கள் உதையுங்கள்சூறையாடுங்கள் தீயிலிடுங்கள் முட்டாள்முடன் என்று திட்டுங்கள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்வான் ஆன்மீக சுதந்திரத்தில் தலையிட்டாலோ எரிமலையெனப் பொங்கி எழுவான். முகலாய சாம்ராஜ்யம் பாரதத்திலே சிலகாலம் நிலைகொள்ளக் காரணமாயிருந்ததற்குக் காரணம் ஆன்மீக சுதந்திரத்தில் அவர்கள் தலையிடாமல் இருந்தமையேயாகும், ஜஹாங்கீர், ஷாஜஹான், தாராஷகோ ஆகியோரின் அன்னையர் எல்லாம் இந்துக்களே! துர்மதி கொண்ட ஒளரங்கசீப் என்றைக்கு இந்த சமயத்தில் கைவைத்தானோ அன்றே அழிந்தது முகலாய சாம்ராஜ்யம். ஆங்கிலேயர் இன்றும் இந்தியாவை ஆளுகிறார்கள் என்றால் அது சமய விஷயங்களில் தலையீடில்லாமல் நடப்பதனாலேயாகும். கிறிஸ்தவ மிஷனரிமார்கள் ஒருமுறை தலையிட்டார்கள் அதன் விளைவுதான் 1857இல் தோன்றிய உள்நாட்டுப் புரட்சி!

நமது ஈழத்தமிழ்த் தலைவர்கள் விவேகானந்தரின் போதனைகளை என்றைக்குக் கடைப்பிடிக்கப் போகிறார்களோ அன்றுதான் இலங்கைத் தமிழனுக்கு விமோசனம், விடிவு, விடுதலை எல்லாம்! அப்படியான ஒரு சூழ்நிலை ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் எதுவும் தென்படுவதாக இல்லையே!

சில நாட்களுக்கு முன் வாலிப அன்பர்கள் சிலர் 'கடையிற் சுவாமி சமாதிக் கோவில்' திருப்பணிக்கு நிதி சேர்க்கும் நோக்கமாகக் குடாநாட்டு அரசியல் பிரமுகர் ஒருவரிடம் போயிருந்தார்கள்

'தமிழினம் மடிகிறது! நீங்கள் சமாதிக் கோவிலா கட்டுகிறீர்கள்? யாருக்குச் சமாதி? தமிழினத்துக்கா அல்லது சாமியாருக்கா?' என்று சீறிப்பாய்ந்து ஒரு குட்டிப்பிரசங்கமும் செய்தாராம்.

பாவம்! அவரைச் சொல்லியென்ன! தற்கால தமிழ் அரசியல்வாதித் தலைவர்களின் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் கள்தானே அவரும்! சாமியார் யார்! கடையிற் சுவாமி யார் யார்! என்பதை அவர் எப்படி அறிவார்?

எனினும் அவருடைய சீற்றத்துக்கும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. சமயத்தின் பேரால் இன்று நடைபெறும் ஊழல்கள்! கோர்ட்டு வழக்குகள்! பேவிவேஷங்கள் மலிந்த காலமல்லவா இது? அதுதான் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே சுவாமி விவேகானந்தர் சொன்னாரே! தெய்வ நம்பிக்கை வற்றிவிட்டது', என்று.

அவர் இன்னும் என்ன சொல்கிறார். "ஓம்! ஓம்! என்ற பிரணவத்தை உச்சாடனம் செய் ஈசன் திருப்புகழைப்பாடு உருத்திராக்கத்தை வைத்துக் கொண்டு ஜெபம் செய். வேண்டியதை வேண்டுவார்க்கு ஈவான் ஈசன்' என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன இது முற்றிலும் உண்மை. ஆனால் மனமொன்று நாட; கையொன்று செய்ய; வாய் ஒன்று பிதற்ற; செவியொன்றுகேட்க; கண்ணொன்று பார்க்க; தியானம் செய்கிறேன் என்று தன்னைத்தானே ஏமாற்றுவதால் பயன் இல்லை. சித்த சுத்தியடைந்தவன் செய்யும் தியானமும் பூஜையுமே பலன் அளிக்கும்."

இறுதியாக விவேகானந்தர் என்ன சொல்கிறார்.

'நீறுபூத்த நெருப்புப்போல் ஆன்மபலம் நமக்குள்ளே அடங்கிக்கிடக்கிறது; நமது தேசியத்தின் முதுகெலும்பு ஆத்மீகம்! நம் இனத்தின் மொழி ஆத்மீகம்! கற்பனை ஆத்மீகம்! எல்லாமே ஆத்மீகம்!

"நமது அரசியல், சமூகம், முனிசிபாலிட்டி தொற்று நோய்தடுப்பியக்கம், பசி, பட்டினி போக்கும் சேவை, எல்லாமே இதுவரை நடந்தது போல் தொடர்ந்து நடைபெறும். அது ஆத்மீக சக்தி ஒன்றினால்தான் நடைபெறும். அருமை நண்பனே! உங்கள் கூச்சலும் கூப்பாடும் மாறுதல் சுத்த சூன்யத்திலே தான்சென்று முடியும்".

# இன்று நடக்கும் தமிழ்மொழிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான "தமிழ் மொழி" கருத்தரங்கு யா/அச்சுவேலி புனிததிரேசா மகளிர் கல்லூரியில் இன்று நடைபெறுகிறது.

கோப்பாய் கல்வியை நிலையத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட இக் கருத்தரங்கில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வை. தம்பிராசா தலைமையுரை நிகழ்த்த, திரு எஸ் சி. எஸ். இதம்பரநாதன் வரவேற்புரை நிகழ்த்துவார் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் திருமதி. க. பார்வதி, திருமதி சித்திரலேகா மௌனகுரு, எஸ். சிவலிங்கராசா, இ. மௌனகுரு ஆகியோர் இக் கருத்தரங்கில் கலந்துகொள்வர். (சு)

## இடமாற்றம்

(சாவகச்சேரி)

பருத்தித்துறை பொலிஸ் நிலைய சார்ஜன்டாகக் கடமையாற்றிய திரு. கே. எஸ். வடிவேல் கடந்த 22ம் திகதி தொடக்கம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.


## யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

# குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

## 05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி, (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச்சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY) கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE), ஹொலன்ட் (HOLLAND) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாண சீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA) மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவானாலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**CROSS TRAVEL SERVICES (PVT) LTD.**

Approved Passenger Sales agent in Sri Lanka M/s swissair

**Stage II Modern Market Ist Floor**

BUS STAND CENTRE ROAD, JAFFNA Phone: 22040 - 22065

# "தமிழ் ஈழமே தீவிரவாத இளைஞரின் கொள்கையும் நோக்கமுமாகும்"

## பாராளுமன்றத்தில் பண்டிதர் உரை

(தொடர்ச்சி)

"தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அப்பிரசுரத்திலே கூட தமிழ்ஈழம் தான் தங்களுடைய கோரிக்கை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தங்களுடைய உயிரையே தியாகஞ் செய்து போராடுகின்ற தீவிரவாத இளைஞர்களுடைய நோக்கமும் கொள்கையும் தமிழ் ஈழத்தை நிறுவவேண்டுமென்பது தான் என்பதை நான் இங்கே கூறி வைக்க விரும்புகின்றேன். எனவே அவர்களுடைய குறைகள் என்ன? என்று கூறிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. தமிழ் மக்களுடைய குறையும் அவை தான். அதை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்."

பாராளுமன்றத்தில் அவசரகால சட்டவிவகாரம் மீது பேசிய ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் துண்டுப்பிரசுரத்தில் தமிழ் மக்கள் உள்ளூராட்சி மன்ற தேர்தலை பகிஷ்கரிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணி தேர்தல் மட்டுந்தான் நம்பிக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டிலே தேர்தல் வேண்டியதில்லை. தமிழீழம் தான் வேண்டும் அதனை ஒரு தேர்தல் பிரச்சினையாக மட்டும் தமிழர் விடுதலைக்கூட்டணி பயன்படுத்துகிறது. எனவே தேர்தல் வேண்டாமென்று அந்த தேர்தலை நடத்தாமல் செய்தார்கள் அவர்கள்.

காவற்படையினர் சட்டத்தையும் நீதியையும் நிலை நாட்ட வேண்டிய காவற்படையினர் இப்பொழுது இலங்கா தகனத்தில் ஈடுபடுகின்றார்கள். யாழ்ப்பாண நூல்நிலையத்துக்கு நிகழ்ந்தது போன்று கந்தர்மடத்தில் நிகழ்ந்தது போன்று, வவுனியாவில் நிகழ்ந்தது போன்று எரியூட்டுகின்ற நிகழ்ச்சிகள் சென்ற அரசாங்க காலத்திலே தமிழ்ப் பகுதிகளிலே நிகழவில்லை. இத்தகைய நிகழ்ச்சி ஒன்றுகூட நிகழவில்லை சென்ற அரசாங்கத்தின் காலத்திலே என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

"நாள் செல்லச் செல்ல காலம் செல்லச் செல்ல இந்த மோதல்கள் பெருகிக் கொண்டே போகின்றன. வகுப்புவாதம் மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. இப்பொழுது வகுப்புவாதம் அரசியல்வாதிகளிடம் மட்டுமல்லாமல் அரசியற்கட்சிகளிடம் மட்டுமல்லாமல் காவற்படையினரிடமும் புகுந்து விட்டது என்பதை இப்பொழுது இங்கே கூறி வைக்க விரும்புகிறேன். காவற்படையினர் நடுவுநிலைமையோடு கடமையாற்றாமல் தாங்கள் ஒருபெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வேறுபாட்டைக் காட்டி வருகின்றார்கள் எந்தப்பகுதியில் அவர்கள் பணிபுரிகிறார்களோ அந்தப் பகுதி மக்களுடன் தொடர்பு கொள்ளவே தெரியாமல் காவற்படையினர் நடக்கின்றபடியால் தான் இத்தகைய அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.

"காவற்படையினர் தமிழ் மக்களை எந்த முறையிலே நடத்துகிறார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள். உண்மையிலே அவர்கள் மக்களை விசாரித்தாற்கூட மக்கள் எதுவும் சொல்ல முடியாத நிலையிலே இருக்கிறார்கள். மொழி தெரியாத காரணத்தினால் ஆகவே, வகுப்புவாதம் காவற்படையிலே புகுந்த பின் அரசாங்கம் கொடுக்கின்ற கட்டளைகளையே மீறி தாங்கள் விரும்பியபடி நடப்பதைத் தடுக்கமுடியாத ஒருசூழ்நிலையிலே தான் இந்த நாட்டிலே இத்தகைய தொல்லைகள் ஏற்படுகின்றன.

"இப்பொழுது ஆளும்கட்சி அமைச்சர்களிடத்திலே ஓர் அடிப்படைச் சிந்தனையோ ஞானோதயமோ தோன்றியிருக்கின்றது. சில அமைச்சர்கள், அரசியல் தீர்வைக் காண்பதன் மூலம் தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்த்துவைத்தால் தான் இந்தப் பயங்கரவாதத் தொல்லைகளை நீக்கலாம் என்று இப்பொழுது வெளிப்படையாகப் பத்திரிகைகளில் தெரிவித்திருக்கிறார்கள். பயங்கரவாதத்தை முழுமையாக ஒழித்தால் தான் இங்கே அமைதியை உண்டாக்கலாம் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

"பயங்கரவாதிகள் என்று சொல்லப்படுகின்ற விடுதலைப் போராளிகளிடத்தில் அவர்களுக்குள்ள குறைகள் என்னவென்று நீங்கள் பகிரங்கமாகக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் அவர்களுடைய குறைகள் என்னவென்று, அவர்களுடைய நோக்கம் என்னவென்று இதுவரை உங்களுக்குத் தெரியாதா என்றுதான் நான் கேட்கின்றேன்.

தமிழ்ஈழ விடுதலை இராணுவத்தினர் அண்மையில் யாழ்ப்பாணத்திலே பரப்பிய ஒரு துண்டுப்பிரசுரத்திலே, 'தமிழீழம் தான் எங்களுடைய கோரிக்கை; அத்தமிழீழக் கோரிக்கையை நிறைவேற்றுவதாக இருந்தால் நாங்கள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த ஆயத்தமாக இருக்கிறோம். அத்தமிழீழத்திலே எந்த எந்தப் பகுதிகள் அடங்க வேண்டுமென்பதை நாங்கள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க ஆயத்தம்'' என்று குறிப்பிட்டிருக்கின்றனர். தமிழீழவிடுதலை இராணுவமென்ற அப்படையினர் இப்பிரசுரத்தை நூற்றுக்கணக்கில் அச்சிட்டுப் பரப்பியிருக்கிறார்கள். ஆகவே, அந்த விடுதலைப் போராளிகளின் நோக்கம்—அவர்களின் குறைகள்—என்னவென்று கேட்கவேண்டிய தேவையில்லை. அவர்களுடைய குறைகள் எல்லாவற்றையும் 1956ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரைக்கும் நாங்கள் இச்சபையிலே அடுக்கடுக்காகக் கூறிவந்திருக்கின்றோம். சிறப்பாகத் தமிழீழ மக்களுடைய குறைகளை இங்கு எடுத்துரைத்திருக்கின்றோம். இவற்றை யெல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

இப்பொழுது ஆயுதப் படையினர்கூட வகுப்புவாதிகளாக மாறிவிட்டார்கள் மேலிடத்திலுள்ளவர்கள் கொடுக்கின்ற—அமைச்சர்கள் கொடுக்கின்ற கட்டளைகளையும் அவர்கள் நிறைவேற்றாமல் அதற்கு மாறாக நடக்கின்ற ஒரு சூழ்நிலை இப்போது உருவாகிக் கொண்டுவருகின்றது. இதனைத் தவிர்க்கவேண்டுமானால், இந்நாட்டிலுள்ள சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்றாக இணைந்து சகோதரர்கள்போல் எவ்வித அரசியற் தாழ்வுமின்றி வாழவேண்டுமானால் நாம் நமக்குள்ளேயே பிரிந்து அன்னியோன்யமாக வாழ்கின்ற ஒரு சூழ்நிலை உள்ளதே தவிர, வேறெந்த நிலையிலும் தீவிரவாத தமிழ் இளைஞர்களோ, தமிழ் மக்களோ இல்லையென்பதை மீண்டும் எடுத்துக்கூற வேண்டியது எங்களுடைய கடமை.


1972ஆம் ஆண்டில் அன்றைய பாராளுமன்றத்தில், 'தமிழ் இளைஞர்களின் உணர்ச்சியை மதிக்காவிட்டால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உண்டாகும்' என்றுநான் கூறினேன். இன்று தமிழ் இளைஞர்களின் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. விடுதலைப் புலிகளாக-போராளிகளாக— இருப்பவர்கள் நூறு இருநூறு பேர் தான் என்று நீங்கள் எண்ணக்கூடாது. இன்று பாடசாலையிற் படிக்கின்ற அத்தனை மாணவர்களும் விடுதலைப் போராளிகளாகத்தான் மாறுகிறார்கள். அத்தனை மாணவர்களும் எங்களை எதிர்க்கின்றார்கள். "நீங்கள் தமிழ்ஈழம் என்று சொல்லிவிட்டு அங்கு போய்ப் பேசாமல் இருக்கின்றீர்களே? நீங்கள் பதவியை விட்டு வாருங்கள்'' என்று சொல்லுமளவுக்கு பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள் கூட இருக்கிறார்கள். இப்பொழுது சமுதாயத்தில் வளர்ந்துவருகின்ற மாணவர்கள், இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுடைய நிலைமையைச் சிங்கள மக்களோடு ஒப்பிட்டுப்பார்க்கின்றார்கள். ஏன் அவர்கள் மட்டும் சுதந்திரமாக வாழவேண்டும்? ஏன் அவர்களுடைய மொழிமட்டும் அரசியல் மொழியாக இருக்கவேண்டும்? ஏன் நாங்களும் சுதந்திரமாக வாழக்கூடாது? ஏன் நாங்களும் எங்களுடைய மொழியை அரசியல் மொழியாக ஆக்கக்கூடாது? எத்தனையோ சுண்டைக்காய் நாடுகளெல்லாம்— எத்தனையோ சின்னஞ்சிறிய நாடுகளெல்லாம்— தனிநாடாக இருக்க முடியுமென்றால், ஏன் தங்களுக்குத் தனிநாடு இருக்க முடியாது? இவ்வாறெல்லாம் அவர்கள் எண்ணுகிறார்கள். மாலைதீவு எனப்படும் ஒருசிறிய நாடு— என்னுடைய தொகுதியைவிடக் குறைவான மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட நாடு— ஒரு தனி நாடாக இருக்கலாமென்றால், இரண்டு இலட்சம் மக்களைக் கொண்ட பகாமா ஒரு தனி நாடாக இருக்கலாமென்றால் இங்குள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கையைவிடக் குறைந்த நாற்பது நாற்பத்தைந்து நாடுகள் உலகில் தனிநாடுகளாக விளங்க முடியுமென்றால் ஏன் நாங்கள் மட்டும் மீண்டும் மீண்டும் மனு அனுப்புகின்றவர்களாக, கெஞ்சுகின்றவர்களாக, தந்தி அடிப்பவர்களாக இருக்க வேண்டும் என்று பள்ளிக்கூட மாணவர்கள் எண்ணுகின்றார்கள்; இளைஞர்கள் எண்ணுகின்றார்கள். நாங்களே எம்மை ஆளக் கூடாதா என்ற எண்ணம் ஒவ்வொரு மாணவன் உள்ளத்திலும் உருவாகி வருகின்றதென்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும் இது ஓர் உண்மை நிலை. இதை மறைக்க வேண்டாம். இந்த உண்மைநிலையை ஏற்றுக்கொண்டு, நாம் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ

[7ம் பக்கம் பார்க்க]




SINGER

நகர கிராம மக்களை மகிழ்விக்கும் மற்றுமொரு



# சிங்கர்

சாதனம்

12", 17" கறுப்பு வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி

மிகத் தெளிவாகவும் கவர்ச்சிகரமாகவும் காட்சி தரும் 12", 17" கறுப்பு வெள்ளை தொலைகாட்சிப் பெட்டி இன்று எல்லோரினதும் மனதைக் கவர்ந்துள்ளது. நீங்களும் இன்றே 12" 17'' கறுப்பு வெள்ளை சிங்கர் தொலைகாட்சி பெட்டி ஒன்றை வாங்கி அதன் இன்பத்தை அனுபவியுங்கள்.
பெற்றரியிலும் மின்சாரத்திலும் இயங்கக் கூடியது மொத்த விலைக்கும் தவணைக்கட்டண முறையிலும் கிடைக்கக்கூடியது.
உடனே நாடுங்கள் உங்கள் சிங்கர் வியாபாரிகளை.
விற்பனைக்கு பின்பு சிறந் சேவையும் உண்டு.

12" - ரூ. 2640/00 வரிபை சேர்துத்துக் கொள்ளவும்.
17" மிகவிரைவில் கிடைக்கும்

* Registered Trade Mark of the SINGER Company

குடாக்கனை

# சந்திரன் மரணம் 'கொலை'என தீர்ப்பு

(பண்டத்தரிப்பு)

சுழிபுரம்-மேற்கு குடாக்கனை என்ற இடத்தில் கணபதி சந்திரன் என்ற 45 வயது நபர் கத்திக்குத்திற்குப் பலியான சம்பவம் தொடர்பாக மரணவிசாரணை நடாத்திய மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி திரு. கே. குணரத்தினம் கொலை என்று தீர்ப்பு வழங்கினார்.

மரணவிசாரணையின் போது செல்வன், சந்திரியாள், சரவணபவானந்தன், உதயகுமாரி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் என். கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனை நடாத்தினார்.

கழுத்தில் இரத்தக்குழாய்கள் அறுந்ததினால் ஏற்பட்ட இரத்தப்பெருக்கினாலும் அதிர்ச்சியினாலும் இம்மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

விசாரணை முடிவில் 'கொலை' என்று தீர்ப்பு வழங்கிய பதில் நீதிபதி திரு குணரத்தினம் சந்தேகநபரான கந்தன் என்று அழைக்கப்படும் கந்தசாமி என்பவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## பஸ்ஸூக்கு கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்துகொழும்புக்குச் சென்ற தனியார் பஸ்ஸூக்கு கற்கள் வீசப்பட்டதால் பஸ்ஸின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கின.

அப்பஸ்ஸில் பிரயாணம் செய்த பெண்மணி ஒருவரின் கையிலும் காயம் ஏற்பட்டுள்ளது.

நொச்சியாகமத்தில் வைத்து இக்கல்வீச்சு சம்பவம் நடைபெற்றது.

மற்றும் பிரயாணிகள் பஸ்ஸின் சீட்டுகளுக்குக்கீழ் பதுங்கிக் கொண்டதால் காயங்களெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர். [மா

## யாழ். பல்கலைக்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

ளது

முக்கியமாகத் திருகோணமலை மாணவர்களின் நன்மை கருதி ஏனைய சகல மாணவர்களும், பரீட்சைக்குச் சமூகமளிக்க முடியாது என்ற கோரிக்கையை மாணவர் அவை கூடி ஏற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில், திருகோணமலையைச் சேர்ந்த 200 மாணவர்கள் தற்போது இருக்கின்றார்கள் இவர்கள் திருமலை சம்பவங்களால் கலக்கமடைந்துள்ளனர்.

### மருத்துவபீட மாணவரும் பகிஷ்கரிப்பு

மருத்துவ பீடத்தைத்தவிர்ந்த மற்றைய பீட மாணவர்களுக்கான பரீட்சை இன்று முதல் ஆரம்பமாகின்றது. மருத்துவபீட மாணவர்களுக்கான பரீட்சை ஆகஸ்ட் 16-ம் திகதி ஆரம்பமாகின்றது. திருமலை மாணவர்களுக்கு ஆதரவாக மருத்துவபீட மாணவர்கள் இன்று முதல் வகுப்புகளை பகிஷ்கரிப்பார்கள் என்று மாணவர் அவையினர் தெரிவித்துள்ளனர். [மா]

## துப்பாக்கிமுனையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணம் வைத்திருந்ததாகவும், மற்றவர்கள் காவலாளியையும் மேற்பார்வையாளரையும் கட்டிக்கொண்டு கல்லூரி கந்தோருக்கு சென்றதாகவும் கூறப்படுகிறது.

அங்குள்ள பலகையில்போட்டிருந்த திறப்புக் கோர்வையை எடுத்து விஞ்ஞானகூடத்தைத் திறந்து அங்கிருந்த அசிட்டைக் கொள்ளையடித்துச் சென்றதாக கூறப்படுகிறது.

கந்தோரிலிருந்த தமிழ் தட்டச்சு யந்திரத்தையும், கொள்ளையடித்து சென்றதாகவும் கூறப்படுகிறது.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டார். [ஈ]

## மரண அறிவித்தல்

நல்லூர்

### திருமதி பாக்கியலஷ்மி தம்பிஐயா

நல்லூர் திருமதி பாக்கியலஷ்மி தம்பிஐயா காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிஐயா (மலேசியா) அவர்களின் அருமை மனைவியும், எஸ். செல்லநாயகம் (மலாயன் பென்சனியர்), காலஞ்சென்ற திருமதி அன்னலஷ்மி சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரியும், லோகநாதன் (லண்டன்), பேரின்பநாயகம் (உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், கொழும்பு), லோகேந்திரராணி, குணநிதி, புவனேஸ்வரன் (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும், ருணி, மல்லிகா, பாலசிங்கம் (உரிமையாளர் சித்திராலயா ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்), கிறிஸ்தந்தராசா (பதிவாளர், நீதிமன்றம், வாழைச்சேனை) ஆகியோரின் மாமியாரும், அன்றூ, விஜயந்தி, பிறஷாந்தி, மாலதி, சித்ரா, மனோமதி, ராதிகா, ஷர்மிளா, கவிதா, அரவிந்தன், கார்த்திகா, சியாமளா, முரளீதரன் ஆகியோரின் பேத்தியாரும், காலஞ்சென்ற திருமதி பத்மாவதி சோமசுந்தரம், செல்வி புஷ்பா செல்லநாயகம் (ஆசிரியை, இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), செல்லநாயகம் செல்வேந்திரா (டாக்டர், அவுஸ்திரேலியா), செல்லநாயகம் ஹரிச்சந்திரா (அக்கவுண்டன்ற், அவுஸ்திரேலியா), ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 153, கோவில் வீதி, நல்லூரில் இருந்து இன்று (04-07-1983) மாலை 4 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

7840

நொச்சிகுளம் கொள்ளை :

# தாலிக்கொடியும், உள்ளூர் துப்பாக்கியொன்றும் மீட்பு!

## சந்தேகநபர் இருவர் கைது

(வவுனியா)

வவுனியா நொச்சிக்குளத்தில் நடந்த ஆசிரியையின் தாலிக்கொடி கொள்ளை தொடர்பாகச் சந்தேகத்தின் இருவர் வவுனியா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கொள்ளையடிக்கப்பட்ட தாலிக்கொடியும், உள்ளூர் தயாரிப்புக் கைத்துப்பாக்கியும் இவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் கெக்கிராவ, உலுக்குளம் பகுதிகளைச்சேர்ந்தவர்கள் என்பது விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

ஆசிரியை திருமதி சாமிநாதன் என்பவருடைய 13 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த தாலிக்கொடி இரு இளைஞர்களினால் கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே. [க]

## நாவலருக்குப்பின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இ. சமய ஒப்பியல்.

ஈ கல்வி

(வைப்புநிதி: 200,000/-)

4. சிறுவர் இல்லம், திருநெல்வேலி- வேண்டிய வசதிகள் செய்து இந்நிறுவனத்தைமுன்மாதிரி சிறுவர் இல்லம் ஆக்கல்!

வைப்புநிதி:ரூபா 250,000/-

5. பண்ணிசைப் பயிற்சிக் கல்லூரி: சைவக் கோயில்களில் நடைபெறும் சடங்குகளிலும் வழிபாட்டு முறைகளிலும் சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் சமநிலை உருவாகுவது இதன் நோக்கமாகும்.

வைப்பு நிதி: ரூபா 200,000/-

6. திருநெல்வேலியிலுள்ள சிறுவர் இல்லத்தில் மாண்புமிகு இராஜரத்தினம் அவர்களின் உருவச்சிலை நிறுவுதல்.

திட்டமிட்ட செலவு- ரூபா 100,000/-

இவையாவற்றையும் நிறைவு செய்ய எட்டு லட்சம் ரூபா எமக்குத் தேவைப்படுகின்றது. இத்திட்டம் நிறைவேற உதவியளிப்பது இந் நாட்டிலுள்ள ஒவ்வொரு சைவருக்கும் உரிய புனித கடமையாகும். சைவநீதி தழைக்க உழைத்த இச் செம்மலின் நினைவை இந் நாட்டில் நிலைநாட்ட இன்றியமையாதது நிதி என்பது யாவரும் அறிந்ததே. எனவே இம் மகானின் தன்னலமற்ற சேவையில் அபிமானமுற்ற பெரியோர்கள், பழைய மாணவர்கள், சைவநன்மக்கள் ஆகியோரும் தாராளமாகப்பொருள் உதவி செய்து இவ்வரிய பணிக்கு உறுதுணை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சிறப்பாக இவ்விண்ணப்பத்தினை விடுக்கின்றோம். அதுபோன்று திருநெல்வேலிச் சைவர் இல்லத்திலிருந்து வெளிப்பட்ட பெருமக்களாகிய ஆண் பெண் இருபாலாருக்கும் இச்சிறப்பு விண்ணப்பம் உரித்தாகும். சைவவித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலைகளிலே கற்பித்த பெருந்திரளான ஆசிரியர்கள் இலட்சக்கணக்கான மாணவர்கள் ஆகியோரும் தம் கடமையாக இந்நாட்டில் வாழ்ந்த பெரியாருக்கு உகந்த வகையிலே நன்றிக் கடனைச் செலுத்த முன்வருமாறு வேண்டுகிறோம்.

நிதி உதவுவோர் [illegible] காசோலையாகவோ, வங்கிக் கட்டளையாகவோ, அஞ்சல் கட்டளையாகவோ "இந்துபோட் இராஜரத்தினம் ஞாபகார்த்தப் பணிக்குழு" என்ற பெயரில் எழுதி பொதுச் செயலாளர், இந்துபோட் இராஜரத்தினம் ஞாபகார்த்தப் பணிக்குழு, 80, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

## திருமலை நிலைமைகள் குறித்து ஆராய்ந்தனர்

(திருகோணமலை)

திருகோணமலை நிலைமைகளை ஆராயும் பொருட்டு நேற்று அங்குள்ள அரசாங்க செயலகத்தில் மகாநாடொன்றுநடைபெற்றது.

இம்மகாநாட்டில் திருகோணமலை இணைப்பதிகாரியும், கடற்படைத் தளபதியுமான அசோகா டி சில்வா, திருமலை மாவட்ட அமைச்சர் திரு. நெல்சன், 17 இணைப்புக்குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாவனையாளர்களுக்கு பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அரசாங்க, தனியார்துறை ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறும் திருகோணமலை இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார்

## பொலிசாரிடம் சிக்கினார்

(சுண்டிக்குளி)

மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தவர்பொலிசாரைக் கண்டதும் மோட்டார் சைக்கிளையும் விட்டுவிட்டு ஓடியபோது, பொலிசாரால் துரத்திப் பிடிக்கப்பட்டார். இச்சம்பவம் கட்டுவன் சந்தியில் நடைபெற்றது.

காங்கேசன்துறைப் பொலிசார் கட்டுவன் சந்தியில் ரோந்தில் ஈடுபட்டபோது, ஏழாலையைச் சேர்ந்த க. இராஜலிங்கம் என்பவர் பதினைந்து போத்தல் கசிப்புடன் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார் என்றும், பொலிசாரைக் கண்டதும், மோட்டார் சைக்கிளையும் விட்டு ஓட, பின்பு பிடிக்கப்பட்டார். கசிப்பைக் கைப்பற்றிய பொலிசார், சந்தேக நபரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

## கந்தர்மடத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சிசுவின் மரணம்தொடர்பான மரண விசாரணையைப் பதில் நீதவான் எஸ். எஸ். பிரான்சிஸ் நடாத்தினார்.

அரசடி 5ம் ஒழுங்கையைச் சேர்ந்த சின்னப்பொடி சிவராசா 27 வயது) என்பவர் சாட்சியமளிக்கையில்! இச்சிசுவின் சடலத்தை நாயொன்று கொண்டுபோவதைத் தான் கண்டதாகவும் அதைக் கலைத்துச் சடலத்தை மீட்டுவிட்டு யாழ். பொலிசில் புகார்செய்ததாகவும் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை செய்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியரும், சட்டவைத்திய அதிகாரியுமான டாக்டர் எஸ். சரவணபவானந்தன் கழுத்தை நெரித்ததால் இச்சிசு இறந்ததாகவும், வெள்ளை நூல் கயிற்றால் கழுத்தில் இறுக்கப்பட்ட காயம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

பதில் நீதவான் விசாரணையின் பின்னர் இது ஒரு ஆட்கொலை எனத் தீர்ப்பளித்து, தொடர்ந்து பொலிசாரை விசாரணை செய்யும்படி உத்தரவிட்டார்.

யாழ். பொலிஸ் நிலைய பொலிஸ் கான்ஸ்டபிள் எம். பி. நமசிவாயம் சாட்சியை ஆஜர் செய்தார். [ஈ]

## ரூப வாஹினியில் இன்று

| | |
|---|---|
| மாலை | |
| 6-00 | நிகழ்ச்சி முன்னோட்டம் |
| 6-02 | கல்வி நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-30 | ஆங்கில நிகழ்ச்சி |
| 7-00 | செய்தி மஞ்சரி (தமிழ்) |
| 7-14 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 7-15 | விளையாட்டு நிகழ்ச்சி |
| 8-15 | செய்தி மஞ்சரி (சிங்களம்) |
| 8-29 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 8-30 | நகைச்சுவை நிகழ்ச்சி |
| 9-00 | கலாசார நிகழ்ச்சி |
| 9-30 | செய்தி மஞ்சரி (ஆங்கிலம்) |
| 9-44 | நாளைய நிகழ்ச்சிகள் |
| 9-45 | துப்பறியும் தொடர் ஆங்கில நிகழ்ச்சி |
| 10 40 | ஒளிபரப்பு முடிவு |

## நெல்லியடி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அச்சமயம் சாரதியும், கண்டக்டரும் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது. சாரதி சுந்தரலிங்கம் இச்சம்பவம் தொடர்பாக புகார் செய்துள்ளார்.

தற்போது பஸ் பருத்தித்துறை டிப்போவில் நிறுத்தப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## உரும்பராயில் 'மர்மப் பார்சல்'

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் தபால் நிலையத்துக்கு முன்னால் "மர்மப் பார்சல்" ஒன்று நேற்றுக்காலை காணப்பட்டது.

## இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பில் அங்கம் பெறும் எட்டுப்பாடசாலைகளும் இணைந்து நடத்தவிருக்கும் கண்காட்சி இன்றும் நாளையும் கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் இரா சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி எம். பி. வி. ஆனந்தசங்கரியும் சிறப்புவிருந்தினராக வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் எம். சிவசம்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber B; 100236/81; Eelanadu-P. O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.